1972 மார்ச் 8]

திரு. எம். தேவராசன் : புதிதாகக் கட்டப்படவிருக்கும் தலைமைச் செயலகம் பெங்களூரிலே இருக்கின்ற விதான் சபா போன்று கட்டப்படுமா ? உல்லாசப் பயணிகள் பெருமளவுக்கு வந்து பார்க்கக்கூடிய நிலையில் இருக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூன்று, நான்கு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டால் யாரும் பார்க்கமுடியாத அள வுக்குக் கட்டடம் இருக்காது.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 352 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) உப்பிடமங்கலம் பேரூராட்சிமன்றத்தைச் சேர்ந்த ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலைமையில் உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) குடிநீர் திட்டத்தின் மதிப்பீடுகள் தயார் செய்ய, ஆய்வு வேலை விரைவில் தொடங்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் ஓரளவுக்கு முடிந்துவிட்டன என்று கருதுகிறேன். உப் பிடமங்கலத்தில் ஒரு பெரிய மாட்டுச் சந்தை இருக்கிறது என் பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அங்கே மாட்டுக்குத் தண்ணீர் கிடைக்காமல் காசு கொடுத்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே திட்டத்தைத் துரிதப்படுத்தி நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிர்வாக ஒப்புதல் இதற்கு அளிக்கப்பட்டு இதற்காக 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டாகிவிட்டது. இவையெல்லாம் வேலைகள் ஆரம்பமாகும் என்பதற்கான சூழ்நிலைகள்தாம்,